முத்தரசி
கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
2023
VOLUME : 1 ISSUE : 1 AUG- 2023

# நாடகங்கள் சித்திரிக்கும் சமூக உறவுகள்

**பி.தனலெட்சுமி,**
**முனைவர் பட்ட ஆய்வாளர்,**
**தமிழ் உயராய்வு மையம்,**
**பாத்திமாக் கல்லூரி,**
**மதுரை.**

## முன்னுரை

இலக்கியங்கள் தாம் சார்ந்த சமூகத்தின் பதிவேடுகள் எனில் அது மிகையாகாது. அவற்றுள் நாடகமானது சமூகத்தோடு நேரடியான உறவு கொள்ளும் அற்புத கலைவடிவமாகும். இவை மக்களிடையே காணப்படும் குறைபாடுகளை அவர்களின் கண்முன்னே நிகழ்த்திக்காட்டி சமூக மாற்றத்திற்கு வித்திடுகின்றன. அந்தவகையில் நவீன நாடகங்கள் புலப்படுத்தும் சமூக உறவுகளை எடுத்துரைக்கும் விதமாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

## மனிதனுக்கும் சமூகத்திற்குமான உறவு

மனிதர்கள் பலரும் தமக்குள் ஒன்றுபட்டு கூடிவாழும் அமைப்பே சமூகமாகும். இவற்றுள் உறவு என்பது முக்கிய இடம்பெறுகின்றது.

“சில பொதுவான விழுமியங்களையும் நம்பிக்கைகளையும் கொண்டு தமக்கிடையே வினையாற்றிக் கொள்ளும் ஒருவருக்கொருவர் உறவுகொள்ளும் தன்னிறைவுடைய நிலையான மிகப்பெரிய மக்கள் குழுவே சமுதாயம்” - (சி.இ.மறைமலை, மார்க்சியமும் இலக்கியமும்,ப:20) என்னும் மேற்கோளானது மேற்கண்ட கூற்றுக்கு அரண் சேர்ப்பதாக அமைந்துள்ளது. நவீன நாடகங்கள் சித்திரிக்கும் சமூக உறவுகளை சாதிய அடிப்படையிலான உறவு, பாலின அடிப்படையிலான உறவு மற்றும் மனிதனுக்கும் இயற்கைக்குமான உறவு என்று வகைப்படுத்திக் காணமுடிகின்றது.

## சாதிய அடிப்படையிலான உறவு

நிலவுடைமைச் சமூகத்தின் தோற்றமும் வருணப்பாகுபாடும் மனிதர்கள் செய்யும் தொழிலை மையப்படுத்தி அவர்களுக்குள் ஏற்றத்தாழ்வினைத் தோற்றுவித்தன. தொழிலின் அடிப்படையில் சாதியானது வரையறுக்கப்பட்டது. இதன் காரணமாக வர்க்கமுரண்பாடுகள் தோற்றம் பெறத் தொடங்கின.

“சாதி என்பது ஒரு பொதுப்பெயர் கொண்ட குடும்பங்களின் திரட்சியையோ அல்லது அவ்வாறான குடும்பங்களை உள்ளடக்கிய குழுக்களையோ குறிக்கும். இப்பொதுப்பெயரானது ஒரு குறிப்பிட்ட தொழிலைக் குறிப்பதாகவோ அல்லது குறிப்பிட்ட தொழிலோடு தொடர்புடையதாகவோ இருக்கும்” -(முருகையன்.மு, தமிழர் பண்பாட்டில் சாதியம்,ப:138)

என்பதன் வழி தொழிலின் அடிப்படையிலேயே சாதிப்பாகுபாடு தோற்றம் பெற்றமையினை அறிந்து கொள்ள முடிகின்றது. தொடக்கத்தில் பேரரசுகளின் பேராசைக்காக வாழ்விழந்த மக்கள்

SAMPLE

காலப்போக்கில் சாதி என்னும் பெயரில் பல்வேறு ஒடுக்குதல்களுக்கு உள்ளாகினர். இதனால் சமூகத்தின் ஒரு பிரிவினர் காலங்காலமாக எதிர்கொள்ளும் சவால்களையும் சங்கடங்களையும் நவீன நாடகங்கள் காட்சிப்படுத்துகின்றன. குறிப்பாக திரு.கே.ஏ.குணசேகரனின் பெரும்பாலான நாடகங்கள் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளை மையமிட்டதாக அமைந்துள்ளன.

“நாடு பூராவும் நாங்க இருந்தும்
நாதியத்துப் போனோம்
காலம் மாறி காலம் வரினும்
கதவு மூடக் கண்டோம்
ஆதி சாதியான சரித்திரத்தில்
அடக்குமுறைக்கு ஆளானோம்
நாலுவர்ண சாதியிலே நாங்க
மனுஷர் இல்லே
நாயினும் கேடானோம் வாழ்க்கை
இங்கு இல்ல”

என்று ஒடுக்கப்பட்ட மக்களின் நிலை ‘பலியாடுகள்’ நாடகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும் இவை பிரச்சினைகளை மட்டும் சுட்டிச் செல்லாமல் அதற்கான மாற்று வழிகளையும் அதனை மாற்றும் வழிகளையும் மக்களுக்கு உணர்த்திச்செல்கின்றன. மக்கள் தங்களுக்குள் பல்வேறு ஏற்றத்தாழ்வுகளைக் கொண்டிருந்தாலும் தேசம் எனும் போது ஒன்றுபடுவர்.

“காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை பல மொழி பேசும் இந்தியர் எந்தச் சாதியராக இருந்தாலும் எந்த மதத்தவராக இருந்தாலும் நாம் அனைவரும் இந்தியர்”

என்னும் கூற்றின் வழி தேசிய ஒருமைப்பாட்டினைத் தூண்டி சாதிய ஏற்றத்தாழ்வினை நீக்கும் முயற்சியை ஆசிரியர் மேற்கொள்வது புலனாகின்றது. சாதிய வன்முறைகளையும் ஒடுக்கப்பட்ட மக்களின் அவல நிலையினையும் உணர்வுப்பூர்வமாக நாடகங்கள் சித்திரிக்கின்றன. இதனை காணும் மக்கள் விழிப்புணர்வையும் ஒருமைப்பாட்டின் அவசியத்தையும் ஒருங்கே பெறுகின்றனர். மக்களிடையே சாதி, மதம் எனும் பெயரில் நிலவும் முரண்பாடுகளால் நாட்டின் அமைதி சீர்குலைவதோடு வன்முறை வெறியாட்டங்களும் அரங்கேறுகின்றன. இதனை நாடகங்கள் எடுத்துரைத்து சமூக ஒற்றுமைக்கு வித்திடுகின்றன.

**பாலின அடிப்படையிலான உறவு**

பாலின அடிப்படையிலான உறவு என்பதை ஆண்களுக்கும் பெண்களுக்குமிடையிலான உறவு, சமூகத்திற்கும் மூன்றாம் பாலினருக்குமான உறவு என்று பாகுபடுத்திக் காணமுடிகின்றது.

தாய்வழி சமூகத்தில் உயர்வாகக் கருதப்பட்ட பெண் தந்தைவழி சமூகத்தில் இரண்டாம்தரக குடிமகளாகக் கருதப்பட்டாள். பெண்களின் உலகம் ஆண்களின் பார்வையிலேயே கட்டமைக்கப்பட்டது. ஆணைச் சார்ந்தே இயங்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்ட பெண் உடைமைப் பொருளாகப் பார்க்கப்பட்டு அடிமையாக நடத்தப்பட்டாள். காலப்போக்கில் தன்னுடைய நிலையினை பெண்கள் உணரத் தலைப்பட்டதன் விளைவால் பெண்ணியம் எனும் இயக்கம் தோற்றம் பெற்றது. இதன் தாக்கம் இலக்கியங்களிலும் வெளிப்படத் தொடங்கியது. அந்த வகையில் சமூகத்தில் நிலவும் பெண் கருக்கொலை, சிசுக்கொலை, கல்வி மறுப்பு, வரதட்சணைக் கொடுமை, உரிமை மறுப்பு மற்றும் பெண்களுக்கெதிரான பல்வேறு வன்முறைகளையும் நவீன நாடகங்கள் படம்பிடித்துக் காட்டுகின்றன. மேலும் இத்தகைய சிக்கல்களைத் தடுப்பதற்கான வழிமுறைகளையும் தவிர்க்க வேண்டியதன் அவசியத்தையும் இவை சுட்டிச் செல்கின்றன.

“நம்நாட்டில் எத்தனை துறைகளில் பெண்கள் உயர்ந்திருக்கிறார்கள். இந்தக் கிராமத்தில் மட்டும் பெண் சிசுவிலேயே கொலையாகணுமா? மொட்டு மலராமலே கருகணுமா…நீங்க எல்லாம் ஒன்னு சேர்ந்தால் உங்களை விடியல் தேடி வரும்…” (ப:2) என்று நளாயினி என்ற ஒருத்தி தீ என்னும் நாடகம் பெண்சிசுக்கொலைக்கு எதிரான விழிப்புணர்வினை ஏற்படுத்துவதாய் அமைந்துள்ளது. நாடு வளமும் வளர்ச்சியும் பெற ஆண், பெண் என்ற பாகுபாடுகள் களையப்பட வேண்டும்.

பாலினத்தை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு சமூகத்தின் புறக்கணிப்புக்கு உள்ளாகி விளிம்பு நிலைக்குத் தள்ளபட்ட ஒரு பிரிவினர் திருநங்கையர் ஆவர். இயற்கையின் பிழையால் தங்களது வாழ்வை இழந்து விலங்கினும் கீழாகக் கருதப்படும் இவர்களின் மனநிலையினையும் தேவைகளையும் நவீன நாடகங்கள் விண்டுரைக்கின்றன. திருநங்கையாக மாறுவதற்குக் காரணம் குரோமோசோம்களின் குறைபாடே என்ற அறிவியல் உண்மையையும், குடும்பம் மற்றும் சமூகத்தின் புறக்கணிப்பே இவர்களின் இழிந்த வாழ்விற்குக் காரணம் என்றும் ஆணியடித்தாற் போல் நாடகங்கள் பதிவு செய்கின்றன.

“மலத்தைப் போல ஒதுங்கிக் கிடக்கிற எங்களின் உணர்ச்சிகளையும் புரிந்து கொள்ளுங்கள்… எங்களை முள் படுக்கையில் தள்ளி முறுவலிக்கிற உங்களின் சாமர்த்தியம் உங்கள் பேச்சில் நன்கு தெரிகிறது… பெற்றோர்களால் புறக்கணிக்கப்பட்டு, செல்லும் திசை தெரியாது, வானம் பார்த்த பூமியாய் ஏங்கித் தவித்த சோகத்தின் வலியை எப்பொழுதாவது நீங்கள் உணர்ந்ததுண்டா?... பட்டாம் பூச்சியாய் பறந்து திரிய வேண்டிய பருவ வயதில் சிகப்புச் சந்தையில் விலை பேசப்பட்டு இறக்கைகள் கிழித்தெறியப்பட்ட சோகத்தின் வலியை நாங்கள் சொன்னாலும் அதன் ஆதியோடு அந்தம் அறிய உங்களுக்கு வாய்ப்பேயில்லை… வலி…வலி… வலியை மட்டுந்தான் எங்கள் வாழ்க்கையில் சொத்தாக சேர்த்திருக்கிறோம்” (வலிஅறுப்பு:49,51) என்று திருநங்கையரின் வலிகளும் வேதனைகளும் நிறைந்த மறுபக்கத்தை உணர்வுப்பூர்வமாக மக்களின் கண்முன்னே நிகழ்த்திக் காட்டுகின்றன. திருநங்கையரை திருத்தங்கையராகவும் திருத்தம்பிகளாகவும் பார்ப்பதின் வாயிலாக மாற்றுப் பாலினரை சமூகத்தை மாற்றும் பாலினராக மாற்றி ஏற்றம் காணமுடியும் என்பதனை நவீன நாடகங்களின் வழி அறியமுடிகின்றது.

**மனிதனுக்கும் இயற்கைக்குமான உறவு**



SAMPLE

முத்தரசி

2023

முத்தரசி
கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
VOLUME : 1 ISSUE : 1 AUG- 2023

இயற்கையின் வரத்தால் வாழ்வு பெற்ற மனிதன் தொடக்கத்தில் இயற்கையைப் போற்றிப் பாதுகாத்தான். இயற்கையோடு இயைந்து வாழ்ந்த மனிதன் வாழ்வில் அறிவியலின் வளர்ச்சியானது பல்வேறு மாற்றத்தையும் ஏற்றத்தையும் ஏற்படுத்தியது. இதன் விளைவால் தனது சுயலாபத்திற்காக இயற்கையை அழிக்கத்தொடங்கினான். வாழ்வாதாரங்களை அழித்து தமது வாழ்வைக் கட்டமைக்க நினைக்கும் மனித மன நிலைப்பாட்டினை நவீன நாடகங்கள் எடுத்துரைக்கின்றன. இயற்கை வளங்களைச் சுரண்டுதல், வனங்களையும் நீராதாரங்களையும் அழித்து வாழ்விடங்களை அமைத்தல், உயிரினங்களைக் கொல்லுதல், ஞெகிழி பயன்பாட்டால் நிலத்தைப் பாழ்படுத்தல் போன்ற மனிதனின் செயல்பாடுகள் இயற்கைச் சமநிலையைச் சிதைத்து அழிவிற்கு இட்டுச்செல்லும் என்பதனை நவீன நாடகங்கள் எடுத்துரைக்கின்றன.

“நான் பொறக்குறதுக்கு முந்தியே முளைச்ச இந்த மரங்களை எனக்கு மூத்தவர்கள் என்று என் தந்தை சொன்னார். புதர்ப் பூக்கள் எல்லாம் என் தங்கைகள் என்று தாய் சொன்னார். எனக்கு மூத்த தங்கைகளும் கொஞ்சம்… அந்தப் பறவைகள் எல்லாம் நம்முடைய தூரத்து உறவுகள் என்று எனக்குச் சொல்லித் தந்தாங்க. பறம்பு மலைக் குறவர்களும் குறத்திகளுந்தான் எனக்கு ஆசிரியர்கள்.. ஒவ்வொரு காட்டுப்பூவுக்கும் பெயர் சொல்லித் தந்தாங்க.”(குறிஞ்சிப்பாட்டு ப:31)

என்னும் வரிகள் தொடக்கத்தில் மனிதன் இயற்கையோடு கொண்ட உறவினைப் புலப்படுத்துகின்றன. இவ்வாறு இயற்கையை நேசித்த மனிதன் அதனைப் பாழ்படுத்தியதையும் நாடகங்கள் எடுத்துக்காட்டுகின்றன. முருகபூபதியின் ‘கதை பூமி’ என்னும் நாடகத்தில் நகர வாழ்க்கைக்கு ஆசைப்படும் காட்டு விலங்குகள் நகருக்குள் வருகின்றன. மனிதன் இயற்கையையும் சுற்றுப்புறத்தையும் பாழ்படுத்தியமையைக் கண்ணுறும் விலங்குகள்,

“இங்கே பாரு பிளாஸ்டிக் வாட்டர் பாட்டிலா இருக்கு. இங்கே பாரு, ஒரே பாலிதீன் பையா கிடக்கு” கதை பூமி,ப:65

என்று நகரத்தின் பல்வேறு மாசுபாடுகளைக் கண்டு மீண்டும் காட்டிற்கே திரும்புவதான காட்சியானது அமைக்கப்பட்டுள்ளது. இதன் வழி ஆறறிவு பெற்ற மனிதனே சமூக மற்றும் சூழல் குறித்த அறிவின்றி இயற்கையைப் பாதுகாக்காமல் அழிப்பதை அறிய முடிகின்றது. மேலும் சுற்றுப்புறத்தையும் இயற்கையையும் காப்பது மனிதனின் கடமை என்பதனையும் நவீனநாடகங்கள் எடுத்துரைக்கின்றன.

**முடிவுரை**

பொழுதுபோக்கு மட்டுமின்றி சமூகத்தின் பழுது நீக்குவதையும் தமது தலையாய கடமையாகக் கொண்டு நாடகங்கள் செயல்பட்டு வருகின்றன. நாடகங்கள் பெரும்பாலும் சமூக உறவுகளிடையே காணப்படும் முரண்பாடுகளைச் சுட்டிக்காட்டுகின்றன. காரணம் இவை மக்களிடையே காணப்படும் முரண்பாடுகளைச் சுட்டிக்காட்டி சமூக ஒற்றுமைக்கு வித்திடுவதையே நோக்கமாகக் கொண்டுள்ளன. மக்களிடையே காணப்படும் பல்வேறு ஏற்றத்தாழ்வுகள் நாட்டின் வளர்ச்சிக்குத் தடையாகக் அமைந்துள்ளன. எனவே அத்தகைய ஏற்றத்தாழ்வுகளை மட்டுமின்றி அதற்கான தீர்வுகளையும் எடுத்துக்கூறி சமூக விழிப்புணர்வினை ஏற்படுத்துவதாக நாடகங்கள் அமைந்துள்ளன.

**உதவிய நூல்கள்**

SAMPLE

முத்தரசி
கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
2023
VOLUME : 1 ISSUE : 1 AUG- 2023

- மார்க்சியமும் இலக்கியமும் - சி.இ.மறைமலை
- தமிழர் பண்பாட்டில் சாதியம் - மு.முருகையன்
- நளாயினி என்ற ஒருத்தி தீ - எஸ்.காந்திமேரி
- வலிஅறுப்பு – மு.இராமசுவாமி
- குறிஞ்சிப்பாட்டு - இன்குலாப்
- செம்மூதாய் - முருகபூபதி
- கே.ஏ.குணசேகரன் நாடகங்கள் - கே.ஏ.குணசேகரன்

SAMPLE

முத்தரசி
கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
2023
VOLUME : 1 ISSUE : 1 AUG- 2023

# புறநானூறு : மன்னன் மக்கள் உறவு

**முனைவர். நீ.காஞ்சனா,**
**உதவிப் பேராசியர் - தமிழ்த்துறை,**
ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள்
தமிழ், கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
மயிலம் - 604 304.

சங்கக் கடலில் புறநானூறு என்னும் நூல் வரலாற்றுப் பெட்டகமாக விளங்குகிறது. இதன்கண் வீரம், கொடை இருகண்களாகப் போற்றப்பட்டுள்ளது. சங்க காலத்தில் மன்னராட்சி நிலவியது. சங்கத்தின் தலைவனாக மன்னனையே சங்க இலக்கியம் குறிப்பிடுகின்றது. மன்னனுக்கு என்று சில கடமைகளைப் புலவர்கள் வரையறுத்துள்ளனர். அது மட்டுமல்லாது உலகுக்கு உயிர் போன்றவன் மன்னன் என்பதை,

***"மன்னன் உயிர்த்தே மலர்தலை உயகம்"***

***-(புறம் - 186:2)***

என்ற பாடல் வரி புலப்படுத்துகிறது. அவ்வகையில் புறநானூற்றில் மன்னனுக்கும் மக்களுக்குமான உறவு முறையை ஆய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

## வஞ்சினம் கூறுதல் :

பகைவரைத் தாழ்வித்தல் பொருட்டு இவ்வாறு செய்வேன் என அரசன் ஒருவன் சொல்லிய கூறுபாட்டைச் சொல்லுதல் வஞ்சினக்காஞ்சி ஆகும்.

**"இன்னது பிழைப்பின் இதுவாகியர் எனத்**
**துன்னருஞ் சிறப்பின் வஞ்சினத் தானும்"**[1]

என்று இன்னவாறு செய்தலைப் பிழைத்தேனாயின் இவ்வாறு ஆவேன் என்று வஞ்சினக் காஞ்சியைத் தொல்காப்பியம் குறிப்பிடுகிறது.

"மனிதனுக்கு ஏற்படும் அடிப்படையான உணர்வுகளில் சினமும் ஒன்றாகும். சினத்தை விளக்கும் முறையில் வள்ளுவர் 'வெகுளாமை' என்றே ஓர் அதிகாரம் வகுத்தார். 'சினமென்னும் சேர்ந்தாரைக்கொல்லி' என்றார் அவர். சினத்தின் உச்சி நிலையில் மனிதர்கள் சூளுரை கூறுகின்றனர். நான் இதைச் செய்வேன்; செய்யேனாயின் இவ்வாறு ஆவேன் என்று கூறுகின்ற முறையில் இம்மொழி அமைகிறது. இதை 'வஞ்சினம்' என்று முற்கால இலக்கியங்களும் 'சபதம்' என்று பிற்கால இலக்கியங்களும் கூறுகின்றன. தம் ஆண்மையை இழித்துரைக்கும் பொழுதும், தன்மானத்துக்கு இழுக்கு நேரும் பொழுதும், பழி ஏற்படும் பொழுதும், பழக்குப் பழி வாங்க நினைக்கும் பொழுதும்

SAMPLE

வஞ்சினம் கூறுகின்றனர்”[2] என்று சரளா இராசகோபாலன் அவர்களின் விளக்கம் வஞ்சினம் தோன்றும் சூழல்களைத் தெளிவுபட எடுத்துரைக்கின்றது.

புறநானூற்றில் வஞ்சினக்காஞ்சித் துறையில் ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன், தலையானங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியப் பாண்டியன், நலங்கிள்ளிச் சோழன் ஆகிய மூன்று பேரரசர்கள் வஞ்சினம் உரைத்ததாக மூன்று பாடல்கள் (புறம் 71, 72, 73) உள்ளன. இப்பாடல்களில் நான் இதை செய்வேன்; செய்யேனாயின் இவ்வாறு ஆவேன் என்ற முறைமையைக் காண முடிகிறது.

சேரனும், சோழனும் பெருஞ்சினத்துடன் போரிட வரும் செய்தி கேட்டு ஒல்லையூர் தந்த பாண்டியன், போரின்கண் பகைவரைப் புறங்காணச் செய்வேனாயின் என் தேவியைப் பிரிவேனாக! குறை விளக்கி முறை கேட்டு என்னிடம் வந்தார்க்கு முறை செய்து காப்பாற்றும் இறையாக நானில்லாது கொடுங்கோலானாகுக! என வஞ்சினம் உரைக்கின்றான்.

> ***“பேரமர் உண்கண் இவளினும் பிரிக;***
>
> ***அறன்நிலை திரியா அன்பின் அவையத்துத்***
>
> ***திறன்இல் ஒருவனை நாட்டி, முறைதிரிந்து***
>
> ***மெலிகோல் செய்தேன் ஆகுக;”***
>
> ***(புறம் - 71: 6-9)***

என்னும் பாடலில் அவ்வஞ்சினமொழியை அறிய முடிகிறது. மேலும், தலையானங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன்,

> “***குடிபழி தூற்றுங் கோலே னாகுக”***
>
> ***(புறம் - 72:13)***

என்று வஞ்சினம் கூறுகிறான். மேற்குறிப்பிட்ட இரு பாடல்களில் வஞ்சினம் கூறுமுகத்தான், மக்கள் துன்பமின்றி வாழுமாறு செங்கோலனாக வாழ விரும்பிய அவனுடைய உயர் பண்பை அறிய முடிகிறது.

**ஊழின் தன்மையும் அரசவுரிமையும்:**

அரச உரிமை வழிவழியாக வந்தது. அன்று தேர்தல் களம் இல்லை. தந்தைக்குப் பின்னர் மகன் பட்டத்திற்கு வருவதே முறைமையாக இருந்திருக்கிறது. அரசருக்கு ஆண் குழந்தை இல்லாத காலத்தில்தான் இவ்வழக்கம் தவறியிருப்பதை அறிய முடிகிறது. எடுத்துக்காட்டாக சோழர் பரம்பரையில் வேல்பல் தடக்கை பெருவிரல் கிள்ளியின் ஆட்சி வரை கிள்ளி பரம்பரையினரே உறந்தையிலிருந்து ஆண்டு வந்தனர். அவனுக்குப் பின்



SAMPLE